# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*
கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
**கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2**

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
**முனைவர்.அ.ரேவதி**

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
**பொ. அகத்திய பாலா**

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
**முனைவர் வ.மோகனப்பிரியா**

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
**வே.வெ.சுஜாதா**

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
**மேபல் சுபிதா த.**

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
**கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்**

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
**கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்**

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
**ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2**

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும்**
**கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
**ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2**

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
**ர.கிருஷ்ணவேணி**


**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்

## “Kaanagan Novel from the perspective of folk traditions”

**கட்டுரையாளர்: ர.விண்ணிலவு[1]**

*(23PHD0213)* முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

நெறியாளர்

**கட்டுரையாளர் :முனைவர் அ. மரிய செபஸ்தியான்[2]**

உதவிப் பேராசிரியர்

சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி

விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.

***Abstract:***

*The novel kaanagan reflects the lives of the paliyar tribel community in the Western Ghats. This study aims to explore the folk traditions and cultural practices of the paliyars. Various aspects of their culture, incuding customs, worship rituals, traditions, folk medicine, ceremonies, folk songs, and social structures, are analyzed in detail. The novel depicts significant practices followed by the paliyars, such as childbirth customs, seasonal hunting restrictions, animal sacrifices, divination, and protective rituals like “kanneeru kazhithal” (evil-eye removal). Although the paliyars have lived in harmony with nature, social changes have begum to impact their cultural heritage. This study highlights the uniqueness of paliyar traditions and provides insights into their way of life. Furthermore, it emphasizes the importance of preserving and respecting their cultural heritage amid ongoing societal transformations.*

***Key Words: Paliyar Tribe, Folk Traditions, Cultural Practices, Rituals, Worship, Indigenous Customs, Kaanagan Novel.***

**ஆய்வு சுருக்கம்**

கானகன் நாவல், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வாழும் பழங்குடி சமூகமான பளியர்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கிறது. இந்த ஆய்வு, பளியர்களின் நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பளியர்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள், மரபுகள், மருத்துவம், சடங்குகள், நாட்டுப்புறப் பாடல்கள் போன்ற பண்பாட்டு கூறுகள் பற்றிய விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கானகன் நாவலில் பளியர்கள் பின்பற்றும் பேறுகால வழக்காறுகள், பருவகால வழக்கங்கள், வேட்டையை கட்டுப்படுத்தும் நடைமுறைகள், வழிபாட்டு முறைகள், பலியிடும் வழக்கங்கள், குறி கேட்டல், கண்ணேறு கழித்தல் போன்ற பல நாட்டுப்புற வழக்கங்கள் அடங்கியுள்ளன. பளியர்கள் தங்கள் வாழ்வியலில் காட்டோடு இயைந்திருந்தாலும், சமூக மாற்றங்கள் அவர்களின் பண்பாட்டில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த ஆய்வு, பளியர் சமூகத்தின் தனித்துவமான வழக்காறுகளை வெளிப்படுத்தி, அவர்களின் பண்பாட்டினை புரிந்துகொள்ள உதவுகிறது. மேலும், பளியர்களின் பண்பாட்டு மரபுகளை மதிக்கவும், பாதுகாக்கவும் இந்த ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

**திறவு சொற்கள்:** பளியர் பழங்குடி, நாட்டுப்புற வழக்காறு, பண்பாட்டு நடைமுறைகள், சடங்குகள், வழிபாடுகள், பழங்குடி மரபுகள், கானகன் நாவல்.

**முன்னுரை**

இலக்கியங்கள் தோன்றும் போதே அந்தந்த நிலத்திற்குரிய சூழலை தன்னுள் கொண்டிருப்பதென்பது இயல்பான மற்றும் தனித்துவமான ஒன்றாகவும் கொள்ளலாம். அவ்வகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலத்தை ஐந்திணைகளாக வகைப்படுத்துவர். இத்திணைகளில் குறிஞ்சி மற்றும் முல்லையில் வாழும் மக்கள், மலை மற்றும் காட்டில் இனக்குழுக்களாக இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளனர். அந்த வகையில், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வாழும் பழங்குடிகளில் பளியர்களும் ஒரு வகையாவர். கானகன் நாவலின் வழியே இம்மலைப் பகுதியில் தவளை நாட்டிற்கு கீழுள்ள முப்பதுப் பளியக்குடியில் ஒன்றான மொக்கநிலைப் பளியக்குடியில் வாழும் பளியர்களின் அகவுணர்வுகளை தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார் லஷ்மி சரவணகுமார். இக்கானகன் நாவலில் இடம்பெற்றுள்ள பளியரின மக்களின் நாட்டுப்புற வழக்காற்றை ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**பண்பாடு**

பண்பாடு என்பவை மனிதனின் ஒட்டுமொத்த வாழ்வின் வழிமுறை. அதுவே ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் ஒருமித்த எண்ணங்களே செயல்களாக மாறி, அவை தொடர்ந்து பயன்பாட்டில் இருக்கும் போது அவர்களுக்குரிய பண்பாடாக நிலைத்து நிற்கின்றது.

**பண்பாடு என்பது ஒரு முறைப்படியான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் அமைப்பு அல்லது மன அளவிலான விதி எனக் கருத்தியலாளர் கருதுகின்றனர் (பண்பாட்டு மானிடவியல்,ப.153)**

என்று பண்பாடு குறித்து பக்தவச்சல பாரதி குறிப்பிடுகிறார். இதிலிருந்து பண்பாடென்பது ஒரு வரையறையை வகுத்து, அதற்கேற்றாற் போல் தங்களை வடிவமைத்துக் கொள்ளும் முறையாக கொள்ளலாம்.

**பண்பாட்டுக் கூறுகள்**

மக்களின் வாழ்வில் பின்பற்றப்படும் பழக்கவழக்கங்கள், வழிபாடு, சடங்கு, நம்பிக்கைகள், மருத்துவம், மரபுகள் முதலியனவும் அம்மக்களின் பண்பாட்டுக் கூறுகளுள் அடங்கும் எனலாம். இதுவும் பளியர்களின் தனித்த வழக்காறுகள் எனலாம்.

**ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயிரக்காணக்கான கூறுகள் உள்ளன. அவற்றுள் சில அனைத்துப் பண்பாட்டிற்கும் பொதுவானவையாக இருக்கும். சில அந்தந்தப் பண்பாட்டிற்கு மட்டும் உரியனவாக இருக்கும் (பண்பாட்டு மானிடவியல்,ப. 156)** என்று பக்தவச்சல பாரதி பண்பாட்டுக் கூறுகளைப் பற்றி தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். பண்பாடு என்பது வாழ்க்கையில் மக்களால் பின்பற்றப்படும் வழக்காறுகளின் முழு தொகுப்பாகும். இதன் மூலம் மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ள முடிகிறது. மலை மற்றும் காடுகளோடு ஒட்டிய வாழ்க்கை வாழ்ந்த பழங்குடிளே பளியர்கள். அப்பளியர்கள் தம் வாழ்க்கையில் செய்யும் ஒவ்வொரு செயல்களில் இருந்து அவர்களுக்கே உரிய தனித்த நாட்டுப்புற வழக்காறுகளை வெளிப்படுத்துகிறது இந்த கானகன் நாவல்.

**பளியர் விளக்கம்**

பளியர், பழியர் எனவும் அழைக்கப்படுகின்றனர். பலியன் அல்லது பழையர் அல்லது பழையரேர் (paliyan, paliyar, pazhiaiyarare) எனப்படுபவர் பளியர் தென்னிந்தியாவில், முக்கியமான தமிழ்நாடு மற்றும் கேரளாவில், மேற்குத்தொடர்ச்சி மலைகளின் தென்னகக் காடுகளில் வாழும் திராவிடப் பழங்குடியினராவர். இவர்கள் வேட்டைக்காரர்கறாகவும் தேன் சேகரிப்பவர்களாகவும் உள்ளனர். (https://ta.wikipedia.org/s/tod) என்பதன் மூலம் பளியர் குறித்த விளக்கம் மற்றும் அவர்களின் தொழிலையும் பற்றி விளக்குகிறது. எனவே பளியர் எனும் சொல் மக்களிடம் பலவாறு பயின்று வந்துள்ளதை அறிய முடிகிறது. அவ்வாறே, மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் வாழ்ந்த மக்களை பளியர் என்றே குறிப்பிடுவதை கானகன் நாவலின் வழி பெறலாம்.

**பழக்கவழக்கம்**

பழக்கம் என்பது தொடக்கத்தில் மனிதனின் தேவைக்காக செய்த ஒரு செயலே ஆகும். அப்பழக்கத்தின் தேவையை அறிந்து கொண்ட மக்கள், காலப்போக்கில் அச்செயலை தொடர்ந்து செய்யும் போது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்குரிய வழக்கமாக மாறுகிறது.

இவ்விரண்டு சொல்லும் சேர்ந்து பேச்சுவழக்கில் பழக்கவழக்கம் என்றழைக்கப்படுகிறது. இப்பழக்கவழக்கம் ஒரு தலைமுறையிடம் இருந்து அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படும் போது மக்களின் வாழ்வில் நிலைத்து நிற்கிறது. இவை ஒரு குறிப்பிட்ட மக்களின் வழக்காறாகவும் கருதலாம்.

**பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். வழக்கம் சமூகம் சார்ந்த ஒன்றாகும். ஒரு இனத்தின் ஒரு சிறுப் பகுதியைச் சார்ந்தாரோ சிற்சில நாட்டினர் மட்டிலுமோ அல்லது அவருள்ளும் ஒரு வகுப்பினரோ அல்லது தனித்தனியான ஆட்கள் மட்டிலுமோ செயல்களைச் செய்து வருவதையே வழக்கம் என்று கூறுகிறோம் (தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்,ப.14)** என்ற நூலில் க.காந்தி கூறும் கருத்து பழக்கவழக்கம் என்பதற்கான தெளிவான புரிதலை காட்டுகிறது.

பளியரின பழங்குடி இனத்தை சார்ந்த மக்களின் பழக்கவழக்கங்களும், காலம் காலமாக அவர்கள் செய்தொழுகிய செயல்களில் இருந்தும் அறியலாம். கானகன் நாவலில் இடம்பெறும் பளியர்கள், காட்டை காப்பது சார்ந்த பல பழக்கவழக்கங்களை பின்பற்றுகின்றனர். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள தவளை நாடு முழுக்க வாழும் பளியக்குடிகள் முப்பது. இதில் மிகப்பெரிய பளியக்குடியே மொக்கநிலைப் பளியக்குடி தான். பளியக்குடியில் வாழும் பளியர்கள், **கொலசாமியை கும்பிடக் கூடும்போது தான் பெரும்பாலும் அவர்கள் சமூகத்து முக்கிய சமாச்சாரங்கள் குறித்து முடிவெடுப்பார்கள். மற்றபடி இது மாதிரியான அவசர காலங்களில் முடிவெடுப்பதற்கு முன்னால் சம்மந்தப்பட்ட பளியக்குடியிலிருந்து ஆள் போய் மற்ற இருபத்தி ஒன்பது பளியக்குடியின் மூத்தவர்களிடமும் தகவல் சொல்லி தீர்வு கேட்டு வரவேண்டும். (கானகன்,ப.26)** வழிபாடு மற்றும் குடிகளின் பிற செய்திகளை பேசுவதற்கும் மற்ற குடிகளிலுள்ள பெரியவர்களிடம் சொல்லி, அதற்கான தீர்வை கேட்டபின் இறுதியான முடிவு கொண்டு ஒரு செயலை செய்யும் வழக்கம் அவர்களிடையே இருந்திருக்கின்றன. இவ்வழக்கம் மூலம் பளியர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துவது மட்டுமின்றி தனித்த வழக்காறுகளையும் வெளிப்படுத்துகிறது.

**பேறுகால வழக்கம்**

பளியர்கள் இன்னும் பல்வேறு பழக்கவழக்கங்களை பின்பற்றுகின்றனர். அவற்றில் குறிப்பாக, பளியரினப் பெண்கள் குழந்தைப் பிறப்பிறப்பதற்கு மூன்று நாட்கள் தங்களை தனிமைப்படுத்திக் கொள்ளும் வழக்கத்தைப் பின்பற்றுகின்றனர்.

**பளிச்சி தனக்குத்தானே தான் பிரசவம் பார்த்துக் கொள்ள வேண்டும். குழந்தை பிறப்பதற்கு முந்தைய மூன்று நாட்களும், குழந்தைப் பிறந்தபின் மூன்று நாட்களும் ஒருவரும் அவளைத் தொட்டுவிடக் கூடாது (கானகன்,ப.93)** என்றும்,

**தன் குழந்தையை பிரசவிக்கும் பளிச்சி அவளாகவே தான் பிரசவம் பார்த்துக் கொள்ள வேண்டும், மூன்று நாட்களுக்கு யாரும் அவளையும் அவள் பிள்ளையையும் தொடமாட்டார்கள். தன் குழந்தையின் தொப்புள்கொடி அறுக்கிறவள் அந்தக் குழந்தையை முதலில் காட்டுவது இந்தக் காட்டிற்குத்தான். (கானகன்,ப.67)**

இக்கருத்தின் வழி, பளியரினப் பெண்கள் குழந்தைப் பிறப்பில் பின்பற்றும் தனித்த வழக்கத்தை நாவலின் மூலம் அறியமுடிகிறது. இதன்மூலம் பளியர்களின் வழக்காற்றை பெறலாம். நாட்டுப்புறவியல் அறிஞர் நா.வானமாமலை அவர்களும் தம் நூலில் பளியர்கள் பின்பற்றும் மரபை, **கருவுற்ற பளியப்பெண்ணைப் பேறுகால நேரம் நெருங்கியதும், பேறு காலத்திற் கென்று உள்ள தனிக் குடிசையில் இருக்கச் செய்துவிடுவர் (மக்களும் மரபுகளும்,ப.67)** என்று தெளிவுபடுத்தியுள்ளார். எனவே இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனால் பளியர்கள், தங்களுக்கும் இயற்கைக்கும் தீங்கு ஏற்படாமல் இருக்கவும் சில வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர்.

**பருவகால வழக்கம்**

பளியர்கள் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் விலங்குகள் இனப்பெருக்கம் செய்யும் காலம் என்பதறிந்தவர்கள். எனவே அக்காலத்தில் வேட்டைக்குச் செல்லக்கூடாது என்கின்ற வழக்கம் கொண்டிருந்துள்ளனர். அவ்வழக்கமானது, **இது வேட்டைக்கு போற கெழம இல்ல, அதும் இல்லாம எல்லா மிருகத்துக்கும் இனவிருத்தி ஆகுற நேரம்... இப்ப வேட்டைக்குப் போறது சுத்தமா நல்லமா இல்ல... பூசணி பட்டும் படாமல் பேசிப் பார்த்தார்.**

**எங்களுக்கு மட்டும் ஆசையாப்பே... சமீன் வந்திருக்காரு... வெறுங்கையோட அனுப்ப முடியுமா? இந்தொரு வருசம் வழக்கத்த மீறுறதால ஒன்னும் ஆயிப்போகாது... (கானகன்,ப.107)** கானகன் நாவல் வழி அறியலாம். இதன்மூலம் காட்டில் வாழும் பளியர்களின் வழக்காற்றை தெரிந்து கொள்ளலாம்.

கானகன் நாவலில் லஷ்மி சரவணகுமார் பளியரினத்த தாண்டி, காட்டில் வாழும் மிருகங்களின் வழக்கத்தையும் பதிவு செய்யதுள்ளார். **பருவ காலங்கள் மாறும்போது தங்களின் தேவைகளுக்காக மிருகங்கள் இது மாதிரி அதீதமாய் வேட்டையாடுவது வழக்கம் (மேலது,ப.214)** என்ற வரியிலிருந்து மிருகங்களின் வாழ்வியலையும் அறிய முடிகிறது.

**ஒலி எழுப்புதலில் வழக்கம்**

பளியர்கள் கானகத்தில் தங்களுக்கென குடில்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்த போதிலும், காட்டில் மிருகங்களினால் சில சமயம் அச்சம் ஏற்படுகிறது. அச்சூழல்களில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள பளியர்கள் மேளம் என்ற இசைக்கருவியால் ஒலிகளை எழுப்பி காத்துக்கொள்கின்றனர். **நிலா வெளிச்சத்தில் மிருகங்கள் ஓடுவது பெறும் அச்சத்தை கிளப்புவதாக இருக்க, வழக்கமாக மிருகங்களை துரத்த அடிக்கும் மேளத்தை அடித்தனர். சத்தம் அதிர அதிர காடெங்கும் எதிரொலித்துத் திரும்பியது (மேலது,ப.243)**

பளியர்கள் காட்டோடு வாழும் வாழ்க்கை வாழ்ந்த போதிலும் தங்களால் காட்டிற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படா வண்ணமே வாழ்ந்துள்ளனர். ஆனால், நிலத்திலிருந்து வேட்டையாட வந்தவர்களால் பல்வேறு இன்னல்களை பளியர்கள் சந்தித்துள்ளனர். அதனால் பளியர்களும் சில இடத்தில் வழக்கத்திற்கு மாறான நிலைக்கும் தள்ளப்பட்டனர் என நாவல் எடுத்துக்காட்டுகிறது. இதன் மூலம் பண்பாட்டை அறிய முடிகிறது.

**பளியர் நாட்டுப் பாடல்கள்**

மக்கள் பாடல்கள் பெரும்பாலும் மக்களின் வாழ்க்கை சூழலை அடிப்படையாக வைத்து, உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளால் மக்களால் வாய்வழியாகப் பாடப்படுகிறது. கானகனில் தங்கப்பன், காட்டில் குட்டியை ஈன்ற புலியை (பாட்டாவைஇ) வேட்டையாடினான். அப்போது அப்புலியின் இறப்பினை பார்த்த பளியரினத்தை சார்ந்த சடையன், தம் வருத்தத்தை பாடலாக முணுமுணுத்தான்.

**பாட்டா பறந்து போ...**

**நீ பறந்து போ...**

**பாப்பாவுக்கு பால் குடுக்கனும்... பறந்து போ...**

**உன் மேல எல்லாம் பட்டாம்பூச்சி பறக்குது...**

**சீக்கிரமா பறந்து போ... (கானகன்,ப.23)**

எனும் பாடல் மூலம் பளியர்கள் தங்களின் உணர்ச்சிகளை பாடலாக வெளிப்படுத்துவதை அறியலாம். இதன் வாயிலாக இவர்களின் பாடல்பாடும் வழக்காற்றை தெரிந்து கொள்ள முடியும். மேலும் பளியர்களின் பாடல்களை **வந்த மேட்டுப் பாதையிலே.... என்று தொடங்கும் இவர்களுடைய பாட்டு, சமதளத்திலுள்ள மக்கள் மலைப்பகுதிக்கு வந்து காடுகளை அழிப்பதையும், யானைகள் இடமின்றி தவிப்பதையும் கூறுகிறது. (தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்,ப.168)** அறிவதன் மூலம் தங்களின் வாழ்வியலை பாடலாக பாடி வெளிப்படுத்தும்

திறம் பெற்று இருந்ததை அறியலாம். எளிய நடையில் மக்களின் உணர்ச்சிகளால் பாடும் பாடல் நாட்டுப்புற வழக்காற்றோடு நெருங்கிய தொடர்புடையது.

**மருத்துவம்**

காடுகள் என்பது பொதுவாகவே மருந்துப்பொருட்களின் களஞ்சியம் எனலாம். அக்காட்டோடு வாழ்க்கை வாழ்ந்த மக்களும் மருத்துவத்தை அறிந்து வைத்துள்ளனர். **'இயற்கையை இனங்கண்டறிந்து, அவற்றைப் பயன்படுத்திய நுண்ணறிவே இயற்கை மருத்துவம். மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலியவற்றை அக்கால மக்கள் இனங்கண்டனர். அவற்றின் பல்வேறுபட்ட பயன்பாடுகளையும் தமிழ் மருத்துவர்கள் அறிந்திருந்தார்கள்' (இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள்,ப.16)**

காட்டில் வாழ்ந்த பளியர்களும் மருத்துவ முறைகளை அறிந்துள்ளனர். அதனால் பளியர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் நோய்களுக்கு, இயற்கையிடமிருந்தே மருந்துகளைப் பெற்று அந்நோயினை குணப்படுத்தியுள்ளனர். மருந்தின் பயன் கருதிய வள்ளுவரும் இரண்டாயிரம் நூற்றாண்டிற்கு முன்பே திருக்குறளில், **'மருந்து'** என்ற அதிகாரத்தையும் படைத்துள்ளார். இவ்வதிகாரத்திலுள்ள பத்துக்குறட்பாக்களும் மருத்துவத்தின் நுட்பத்தை தெளிவாக விளக்குகின்றது.

**'உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வன் என்பது**

**அப்பால் நாந்தற்றே மருந்து**

இதிலிருந்து நோய்வாய்ப்பட்டவர், மருத்துவர், மருந்து, உதவுபவர் ஆகிய நான்கு பகுப்பும் சேர்ந்தது தான் மருத்துவம். இவ்வாறு மருந்து என்னும் அதிகாரத்தால் மக்களுக்கு மருத்துவத்தின் நன்மை மற்றும் தேவையை வலியுறுத்துகிறார். நாட்டுப்புற மக்களின் மருத்துவமானது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்துவரின் அதுவும் அவர்களின் பண்பாட்டு மரபாகக் கருதலாம். அதேபோல் காட்டில் வாழும் பளியர்கள் நாட்டு மருத்துவம் அறிந்தவர்களே. பளியர்களின் வழக்கத்தை மீறி வேட்டையாடும் தொழிலைப்புரிந்தவன் தங்கப்பன். அவன் காட்டில் புலியால் தாக்கப்பட்டு கிடந்தபோது இவனை பளியக்குடி ஆட்களே கொண்டு வந்து வைத்தியம் பார்த்துள்ளனர். அச்செய்தி,

**'எண்ணே தங்கப்பன சிறுத்த அடிச்சிருச்சுண்ணே... ஆளத் தூக்கிப போயி பளியங்கதான் வைத்தியம் செஞ்சுக்கிருக்காய்க...' (கானகன்,ப.210)**

**'பாட்டா அவன் உடல் முழுக்க காயத்தைத் துடைத்து உடலில் நஞ்சேறாமலிருக்க மூலிகையால் பத்துப் போட்டுவிட்டிருந்தார்' (கானகன்,ப.210)**

கானகன் நாவலின் மூலம் அறியமுடிகிறது. பளியர்கள் காட்டிலே வாழ்ந்தனால் நோய் தீர்க்கும் தாவரங்களின் குணங்களை அறிந்து வைத்துள்ளனர். எனவே காட்டில் இருக்கும் மருந்துப்பொருட்களின் தேவையறிந்து பளியர்களும் நோய்களுக்கேற்றவாறு மருந்துகளை பயன்படுத்தியுள்ளதை கானகன் நாவலின் மூலம் உணர முடியும். '**மலைகளிலும் காடுகளிலும் உள்ள மூலிகைகளைப் பற்றியும் அவற்றின் வேர்களைப் பற்றியும் எந்தெந்த நோய்களுக்கு அவற்றை மருந்துகளாக என்பது பழியர்களுக்கு தெரியும்.' (தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்,ப.84)**

என்றதிலிருந்து பளியர்கள் எந்தெந்த நோய்களுக்கு எந்தெந்த மருந்துகளை பயன்படுத்த வேண்டும் என அறிந்து வைத்திருந்ததுள்ளனர். இம்மருத்துவமும் பளியர்களின் பண்பாட்டு கூறுகளில் முக்கியமான ஒன்றாகும். இவ்வகை மருத்துவம் நாட்டுப்புற மருத்துவப் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புடையது.

**விருந்தோம்பல்**

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது. இதன் அடிப்படையில், வீட்டிற்கு வந்தவர்களை அன்போடு வரவேற்று விருந்தளிப்பது அடிப்படையாகும். ஒரு சமூகத்தின் சிறந்த பண்புகளுள் விருந்தோம்பல் முக்கியமானதாகும். இது சமூகத்தின் பண்பாட்டையும் உறவுகளையும் வலுப்படுத்துகிறது. இந்த சிறப்பை இலக்கியங்கள் தொடர்ந்து பதிவு செய்து வருகின்றன. தொல்காப்பியத்தில்,

**'விருந்து புறத்தறுதலும் சுற்றம் ஓம்பலும்**

**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்' -தொல்(பொருள்.கற்பியல்.150;3-4)**

விருந்தினரை பாதுகாத்தலும், சுற்றத்தாரைப் பாதுகாத்தலும் குடும்ப தலைவியின் பண்புகளாக தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். (தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல்,ப.212). இதிலிருந்து விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை அறியலாம். கானகன் நாவலின் படி, பளியர்கள் விருந்தோம்பலில் ஈடுபட்டுள்ளனர். வாசி பளியக்குடிக்கு வந்தபோது, '**பூசணி குடிசைக்கு வந்தவனை கயிற்றுக் கட்டிலில் உட்கார வைத்தார். கட்டையன் ஓடிப்போய் வேம்பின் வீட்டிலிருந்து கொஞ்சம் தேனும், வாழைப்பழமும் எடுத்து வந்தான்' (கானகன், ப.188).** பளியர்கள் அவனை குடிசைக்கு அழைத்து, தங்களின் உணவான தேனும் வாழைப்பழமும் கொடுத்தனர். இதன்மூலம், பளியர்கள் விருந்தோம்பும் பண்புடையவர்களாக இருந்ததை உணரலாம்.

**வாழ்வியல் சடங்குகள்**

மனித வாழ்க்கையில் நாகரீக வளர்ச்சி பெற்ற போதிலும், மக்கள் வழி வழியாக பல்வேறு சடங்குகளை பின்பற்றுகின்றனர். அவற்றில், பல இன்று வரையில் மக்களால் வழக்கொழியாமல் கடைபிடிக்கப்படுகிறது. எனவே வாழ்வியல் பின்பற்றும் ஒவ்வொரு சடங்குகளும் அவரவர் அன்றாட செயல்பாடுக்களோடு பிண்ணிப் பிணைந்துள்ளன. இதன் வழியே அம்மக்களுக்கான தனித்த வழக்காற்றை அறியலாம்.

**ஒரு இனத்தின் பண்பாடுகளாக சடங்குகள் விளங்குகின்றன. இவை மரபுரீதியாகத் தொடர்புடையவை. இது ஐம்புலன்களாலும் உள்ளத்தாலும் நிகழ்த்தப்படும் செயல் ஆகும் (முனைவர் சீ.இளையராஜா,ப.83)** இதிலிருந்து ஒரு இனத்திற்குரிய வழக்காற்றை, மக்கள் தம் வாழ்வில் நிகழ்த்தும் சடங்குகளின் வழியாகவும் அறியலாம். கானகன் நாவலிலும் பளியர்கள் தங்கள் வாழ்க்கையிலும் சில சடங்குகளைப் பின்னபற்றுவதை காணமுடிகிறது. **பண்டைய காலம் முதலே மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையோடு தொடர்புடைய பல்வேறு சடங்குகளை செய்கின்றனர். இவை நாட்டுப்புற மற்றும் பழங்குடி மக்களிடம் பல சடங்குகள் வழக்கத்தில் பின்பற்றி நம்பிக்கையாக உள்ளன. இது ஒரு சமூகத்தினரிடம் உள்ள ஒரு கட்டுப்பாடு என்றும் கருதலாம் (தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்,ப.83-84)** இக்கருத்திலிருந்து சடங்கு என்பது ஒரு சமூகத்தின் நம்பிக்கையாகவும் கட்டுப்பாடாகவும் இருப்பதை காணலாம். ஒவ்வொரு இனத்திற்கும் சடங்குகளின் வழிமுறைகளும் வகைகளும் மாறுபடும்.

**கண்ணேறு கழித்தல்**

மனிதர்கள் பேச்சுவழக்கத்தில் (கல்லடிப் பட்டாலும் கண்ணடி படக்கூடாது) என்பார்கள். இதன் பொருள் கல்லால் கூட அடி படலாம் ஆனால் கண்ணால் அடிப் படக்கூடாது என்பார்கள். இதுவே கண் திருஷ்டிப் படுதல் என்றழைக்கப்படுகிறது. மனிதனுக்கு கண் திருஷ்டி பட்டபோது அதனை போக்குவதற்கு சில சடங்குகளை நிகழ்த்துகின்றனர். அச்சடங்கே கண்ணேறு கழித்தல் எனப்படும்.

**மனிதர்களாலும், சில சமயம் விலங்குகளாலும் கூட, கண் திருஷ்டி பட்டு, பலகேடுகள் நேரக்கூடும். இந்த கெடுதல்களைப் போக்குவதற்காக ஒரு வழியை கடைபிடிப்பது உண்டு. பாதிக்கப்பட்டவனை உட்காரவைத்து அவன் தலையைச் சுற்றி உப்பையும் மிளகாயையும் மும்முறை வலமாகச் சுற்றுவார்கள். இதை திட்டி சுற்றல் என்பர். பிறகு அந்த உப்பையும் மிளகாயையும் அடுப்பில் போட்டு எரித்து விடுவார்கள். எரியும்போது கெட்ட நாற்றம் உண்டானால் , உரிய தாக்குதல் சமாளிக்கப்பட்டு விட்டதென்றும், யாருடைய கண் திருஷ்டி**

**பட்டதோ அவனுக்கே இனி, கேடு விளையும் என்றும் பொருள் கொள்ளலாம்' (தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்,ப.87)** இதிலிருந்து மக்கள் கண்ணேறு கழித்தலால் தம் வாழ்வில் உண்டாகும் கேடுகளிலுருந்து காத்துக் கொள்ளவதற்காக இது போன்ற சடங்குகளை செய்கின்றனர். இச்சடங்குகளால் தம்மை பல இன்னல்களில் இருந்து காப்பதாகவும் நம்புகின்றனர்.ஆகவே தான் சடங்குகள் வாழ்க்கைச் சூழலோடு மக்களால் பின்னபற்றப்படுகிறது.

அவ்வாறே கானகன் நாவலிலும், மாதையனின் மனைவி வேம்புவின் மீது பளிச்சி இறங்கி ஆடியப்பின், பளியரினப் பெண்கள் சேர்ந்து கண்ணேறு கழித்தனர். '**பொம்பளைகள் உப்பையும், காய்ந்த வத்தலையும் எடுத்துககொண்டு வந்து ஊரைச் சுற்றி வந்தனர். குளிருக்கு பெருசுகள் தீ மூட்டம் போட்டிருந்தார்கள். ஊரைச் சுற்றி வந்து கழிப்பு கழித்ததை அவர்கள் அந்தத் தீயில் தூக்கிப் போட அவர்களை எதிர்நோக்கியிருக்கும் பீடைகளின் உக்கிரம் அதில் வெடித்து எரிந்தது. ஒருத்தி சின்ன மண்சட்டியில் மஞ்சளைத் தண்ணீரில் கரைத்து அதில் கொஞ்சம் வேப்பிலைகளைப் போட்டுக் கொண்டு வந்து வேம்பின் தலையில் ஊற்றினாள்' (கானகன்,ப.65)** எனும் கருத்தின் மூலம் பளியர்களின் வாழ்வில் பின்பற்றும் சடங்குகளை அறிய முடிகிறது. இச்சடங்குகள் பளியரின மக்களின் வாழ்வின் ஒரு அங்கமாக மட்டுமின்றி தனித்த வழக்காற்றையும் கானகன் நாவலின் வழி காணமுடிகிறது.

**வழிபாடு மற்றும் பலியிடல்**

மலைகளில் வாழும் மக்கள் தாங்கள் வழிபடும் தெய்வங்களுக்கு பலியிடும் முறையைப் பின்பற்றுவதை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. மலைவாழ் தெய்வங்களுக்கு பலியிட்டு வழிபடும் வழக்கத்தை சடங்காகவும் குன்றவர் செய்துள்ளனர். இவ்வழிபாட்டை நற்றிணைப் பாடல் வழி அறிய முடிகிறது. அப்பாடல்,

**'அணங்கொடு நின்றது மலை வான்கொள் எனக்**

**கடவுள் ஓங்கு வரை பேண்மார் வேட்டு எழுந்து**

**கிளையொடு மகிழும் குன்ற நாடன் — நற்.165:3-5**

வழியாக மலை தெய்வத்தை வழிபடும் மக்கள் பல்வேறு சடங்குகளை தங்களுடைய வாழ்வில் கடைபிடிக்கின்றனர். சிறு தெய்வ வழிபாட்டில் பலியிடல் மக்களிடையே முக்கிய சடங்காக பார்க்கப்படுகிறது. இதில் பலியிடுவதற்கான உயிரினங்கள் மட்டுமே ஒவ்வொரு சமூகத்திற்கும் வேறுபடுகிறது. கானகன் நாவலிலும் ஜமீனுடன் பலரும் விலங்குகளை வேட்டையாடிய பின்பு, பளியர்களை அழைத்து பூசையை செய்கின்றனர். '**வேட்டையாடப்பட்ட மிருகங்கள் வடக்கு தெற்குமுகமாக வைக்கப்பட்டன. பனைஓலைகளைப் பரப்பி மரக்கட்டைகளை**

***வைத்தார். பின்பு பூஜை துவங்கியது. பூசாரி வனதேவதைக்கும் பளிச்சியம்மனுக்கும் பூஜை செய்தான் (கானகன்,ப.101)***

என்பதிலிருந்து பளியர்கள் தாங்கள் செய்த தவற்றை எண்ணி பயத்தினால் தெய்வத்திடம் மன்னிப்புக் கோரும் முறையையும் பின்பற்றியுள்ளதையும் நாவல் எடுத்துரைக்கிறது.

***கொல்லப்பட்ட பன்றி முன்னரே அடிப்பட்டு காயமுற்றிருக்கலாம். படைக்கப்பட்டிருக்கும் இறைச்சி அசுத்ததமானதாயிருக்கலாம். எதுவாயினும் எதிர்வரும் காலத்தில் காட்டினால் நேரும் துன்பங்களிலிருந்து எங்களை காத்தருள்வாய் பளிச்சி (மேலது)*** வேட்டையாடி கொண்டு வந்த விலங்குகளை பலியிடும் போது குல தெய்வத்திடம் மேற்கூறியவாறு வேண்டுகின்றனர் பளியர்கள். எதிர் காலத்தில் காட்டினால் வரும் துன்பத்திலிருந்து காப்பாற்றுமாறு வேண்டியே பலியிடுகின்றனர்.

**குறி கேட்டல்**

குறி கேட்டல் என்பது சங்க காலந்தொட்டே மக்கள் பின்பற்றும் ஒரு வழக்கமாக காணப்படுகிறது. பிற்காலத்தில் அதுவே ஒரு சடங்காகவும் மாறியுள்ளது. இச்சடங்குகள் ஒரு குறிப்பிட்ட மக்களால் பாதுகாக்கப்படும் போது அவர்களுக்குரிய வழக்காறாக மற்றும் மரபாக நிலைப்பெறுகிறது. குறி கேட்டல் குறித்து, ***தலைவனின் மேனி வேறுபாடு கண்டவழி மட்டும் பார்க்கும் குறிகளே கட்டும் கழங்கும் என்றுக் கூறுவதற்கில்லை.இனிமேல் என்ன நிகழும் என்பதை முன்னதாக அறிந்து கொள்ளவதற்காக மக்கள் விரும்பும் காலங்களில் பார்க்கப்படும் குறிகளும் (சங்கதமிழரின் வழிபாடும் சடங்குகளும்,ப.253)*** கூறும் சங்க இலக்கிய கருத்துக்களால் குறி கேட்டலின் நோக்கத்தை அறியலாம். கானகன் நாவலிலும் வாசியும் தன்னை யாரோ பின்தொடர்வதாக எண்ணி, அது யார் என அறிந்து கொள்ள பாட்டாவிடம் குறி கேட்டான். பிறகு கட்டையன் குறிச் சொல்வதற்கான இடத்திற்கான ஏற்பாடுகளை செய்தான். பாட்டா உடுக்கையை எடுத்து அடிக்க வாசியின் உடல்மேல் பளிச்சி இறங்கி, ***ரத்தம் வேணும்... பலி வேணும்... உங்ககிட்ட கேட்க முடியாதுறா.....த்தூ....நீங்க எல்லாம் பன்னிக்கூட்டம்...இவனதான் செய்யனும் (கானகன்,ப.193)*** என்று கேட்டது. இவ்வரிகள் மூலம் பளியர்கள் பளிச்சி என்னும் குலத் தெய்வத்திற்கு பலியிடும் சடங்கினை செய்வதை நாவலின் மூலம் உணரமுடிகிறது.

நாவலில் ***சேவல் பலிக்கு தயாராகிவிட்ட அச்சத்தில் அலறியபடியே துடிக்க பளிச்சி ஆவேசமாக அதன் தொண்டையைக் கடித்தான். வாயெல்லாம் குருதி வழிந்தோட சேவல் துடித்தடங்கியது. ஆவேசமாய் அதன் உடலை கடித்து குதறியபடியே குருதியைக் குடித்த பளிச்சி சோர்ந்து போய் பொடவில் உட்கார்ந்தாள் (கானகன்,ப.193)*** எனும் கருத்திலிருந்து பலியிடல் என்பதை

பளியர்கள் பின்பற்றி வருவதை நாவலின் மூலம் உணர முடியும். குலதெய்வங்களுக்கு பலியிடும் சடங்கு இன்றும் பரவலாக மக்களால் பின்பற்றப்படுகிறது. பளியர்கள் சேவல், பன்றி போன்ற விலங்கினங்களை பலியிடுகின்றனர்.

**ஒரு நாட்டின் பண்பாட்டு வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையது அந்நாட்டு மக்களின் வழிபாட்டு மரபுகள்( தமிழர் வழிபாட்டு மரபுகள்,ப.13)** இக்கருத்தின் வழியே வழிபாடு என்பது ஒரு குறிப்பிட்ட மக்களுக்கேயுரிய தனித்த வழக்காறாகவும் எடுத்துக் கொள்ளலாம். பளியர்கள் சேவலை பலியிட்டு வணங்குவதிலிருந்து, பலியிடும் சடங்கு நிகழ்த்தியதை கானகன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**வழிபாடு**

மனிதனின் தேவைக்காக மனிதனால் மனிதனுக்கு உருவாக்கிய ஒன்றே வழிபாடாகும். இவ்வழிபாடு பல முறைகளில் மக்களால் பின்பற்றப்படுகிறது. நாட்டுப்புறத் தெய்வங்களுக்கென்று தனித்த சில வழிபாட்டு மரபுகளைக் கொண்டுள்ளது. வழிபாடு குறித்து தே.லூர்து கூறுகையில், **'நாட்டுப்புறத் தெய்வங்களின் பெயர், வடிவம், வழிபடுவோர், பூசாரி, சாமியாடிகள், செயல்பாடுகள், தெய்வமுறல், இருப்பிடம், கோயில், பலி, நம்பிக்கைகள், புராண பழமரபுக் கதைகள் போன்றவற்றை அடிப்படையாக் கொண்டு நாட்டுப்புறத் தெய்வங்களை அடையாளப்படுத்தலாம்' (தமிழர் வழிபாட்டு மரபுகள்,ப.15)** நமக்கு நாட்டுப்புறத் தெய்வங்கள் பற்றிய தெளிவான புரிதலை ஏற்படுத்துகிறது.

பளியர்கள் தங்களுக்கு நன்மை செய்யும் பொருட்டு பளிச்சி என்னும் குலதெய்வத்தை வழிபடுகின்றனர். பளிச்சியும் சிறுதெய்வத்திற்குரிய சில பண்புகளை பெற்றுள்ளதை கானகன் நாவல் குறிபிடுகிறது. அவ்வாறு, **'தவளை நாட்டு பளியக்குடியின் கட்டுப்பாட்டிலிருக்கும் முப்பது பளியக்குடிக்கும் குலசாமி கோயில், கம்பத்திற்கு மேலாக காட்டிற்குள்ளிருக்கிறது, பளிச்சியின் வீடு' (கானகன்,ப. 25)** என்பதிலிருந்து பளியர்களின் குலசாமி கோயில் காட்டில் இருப்பதை அறியலாம். பளிச்சி என்ற தெய்வம் பளியரின குழுக்களுக்கே உரியதாக நாவலில் காட்டப்படுகிறது

தெய்வங்களுக்கு நாள் குறித்து விழா எடுத்து வழிபடும் வழக்கம் மக்களிடையே காணப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு தெய்வத்திற்கும் வழிபடும் முறை வேறுபடுகிறது. நாட்டுப்புறத் தெய்வங்களுக்குரிய வழிபாட்டை, **'நாட்டுப்புறத் தெய்வங்கள் மனிதர்கள்மேல் இறங்கி மக்களோடு தொடர்பு கொள்ளும். உயிர்பலி தரப்படுவதும் நாட்டுப்புறத் தெய்வங்களின் அடையாலமாக கருதலாம். நாள் பூசை செய்யப்படுவதில்லை. ஆண்டக்கு ஒரு முறை அல்லது சில ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் குழுவினர் ஒன்றுகூடி விழா நடத்துவர்' (தமிழர்**

**வழிபாட்டு மரபுகள்,ப.17)** இக்கருத்தின் வழி தெரிந்து கொள்ள முடிகிறது. மேற்கூறிய சிறுதெய்வதிற்குரிய சில பண்புகளோடு, பளியர்கள் வழிபடும் பளிச்சி தெய்வத்திற்கும் பொருந்துகிறது. பளியர்கள் பளிச்சியம்மனுக்கு விழா எடுத்து வழிபடுகின்றனர். அவ்விழா '**சித்திரை மாதத்தில் பளிச்சிக்கும் வழிபாடு நடக்கும்' (கானகன்,ப.25)** என்பதும் '**சித்திரை மாதம் நெருங்கி வருவதால் பளியர்கள் யாரும் சொல்லிக் கொள்ளாமலேயே பளிச்சி பூசைக்குத் தயாராகிவிட்டனர்' (கானகன்,ப.133)** என்னும் கருத்திலிருந்தும் பளியரின மக்கள் வருடா வருடம் சித்திரை மாதத்தில் பளிச்சிக்கு வழிபடும் மரபைக் கொண்டுள்ளதை நாவலின் வழி அறிய முடிகிறது. ஒரு சமூகத்தின் மரபுகள், சில கட்டுப்பாடுகளுடன் விதிகளாக இருப்பதை விடவும், நம்பிக்கைகளாக பரிணமிக்கும் போது அப்பண்பாட்டு மரபு அடுத்தடுத்து தலைமுறைகளுக்கு கடத்தப்படும் போதும் மக்களால் நிலைத்து நிற்கின்றது. இதனால் அம்மக்களின் தனித்த வழக்காற்றையும் அறிலாம்.

**முடிவுரை**

கானகன் நாவல், பளியர்களின் வாழ்வியல் வழக்காறுகளை ஆழமாக ஆய்வு செய்யும் ஒரு இலக்கியப் படைப்பாகும். அவர்கள் மலை மற்றும் காடுகளோடு சார்ந்த வாழ்க்கை முறையும், பளிச்சி வழிபாட்டு முறைகளும், பேறுகால வழக்கம் மற்றும் பருவம் அறிந்தே வேட்டைக்கு செல்லும் பழக்கவழக்கமும், புலியால் காயமடைந்தவர்களுக்கு இலை, தழையால் குணப்படுத்தும் மருந்துவ முறைகளும், வாழ்வில் கண்ணேறு கழித்தல், பலியிடல் மற்றும் குறிகேட்டல் ஆகிய சடங்குகளை செய்தமையும் நாவலில் வெளிப்படுகின்றன. பளியர்களின் வழக்காறுகள், அவர்களின் சமூக கட்டமைப்பு, வாழ்க்கையின் விதிமுறைகள் மற்றும் உறவுமுறைகள் ஆகியவை அவர்களுக்கே உரிய தனித்துவத்தை கொண்டிருக்கின்றன.

ஆகவே, பளியர்களின் வழக்காறுகளில் சமூக மாற்றத்தினால் பல இடையீடுகள் ஏற்பட்டாலும், அவர்கள் தம் மரபுகளை உறுதியாக பாதுகாத்து வருகின்றனர். இந்த ஆய்வு பளியர் சமூகத்தினை புரிந்துகொள்ள உதவுவதோடு, அவர்களின் வழக்காறுகளை மதிக்கவும், சேமித்து பாதுகாக்கவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கானகன் நாவல் அமைகிறது.

**துணைநூற்பட்டியல்**

1) அன்பழகன்,கி. 'தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல்'. பிரணவ் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, ISSN:2582-9599.
2) இராமநாதன்,ஆறு. தமிழர் வழிபாட்டு மரபுகள். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு-2017.

3) இளையராஜா,சீ. நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சடங்குகள். அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ், கோட்டை 1, வாயில் 3 ஜூலை 2019, ப.83, ISSN: 2582-399X.
4) காந்தி,க. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை — 600113.
5) சண்முகம் பிள்ளை,மு. சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை — 600113.
6) சோமலே. தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும். நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1974.
7) பக்தவச்சல பாரதி. பண்பாட்டு மானிடவியல். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் — 608001.
8) பாலசுந்தரம்,இ. இலக்கியத்தில் மருத்துவ கருத்துகள். நாட்டார் வழக்காற்றியல் கழகம், யாழ்ப்பாணம், 1990.
9) புலியூர் கேசிகன். திருக்குறள் பரிமேலழகர் உரை. பூம்புகார் பதிப்பகம், சென்னை — 600108.
10) லஷ்மி சரவணகுமார். கானகன். எழுத்து பிரசுரம், அண்ணா நகர், சென்னை — 600040.
11) வானமாமலை,நா. மக்களும் மரபுகளும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர், சென்னை — 600050.
12) https://ta.wikipedia.org/s/tod.


## Reference


1. Anbazhagan, k. K. Tamil Hospitality culture. Pranav Tamil Research Journal, Vol.3, ISSN: 2582-9599.
2. Ramanathan, A. Tamil Worship Traditions. Meyyappan Publications, Chidambarasan, 2nd Edition, 2017,
3. Llaiyaraja, C. Folk Life Rituals of the people. Aran International Tamil Research Journal, Vol.1, Issu 3, July 2019, p. 83, ISSN: 2582-399X.
4. Gandhi, K. Tamil Customs and Beliefs. International Tamil Research Institute, Taramani, Chennai — 600113.

5. *Shanmugam Pillai, M. Sangam Tamils' Worship and Rituals. International Tamil Research Institute, Taramani, Chennai* — *600113.*
6. *Somalay, Tamil Nadu People's Traditions and Culture. National Book Trust, India, 1974.*
7. *Bhaktavatsala Bharathi, Cultural Anthropology. Meyyappan Publications, Chidambaram -608001.*
8. *Balasundharam, I. Medical Concepts in Literature. Folk Tradition Research Centre, Jaffna, 1990.*
9. *Puliyur Kesigan, Tirukkural Parimelazhagar Commentary. Poompuhar publications, Chennai* — *600108.*
10. *Vaanamaamalai, N. People and Traditions. New Century Book House (p) Ltd., Ambattur, Chennai* — *600050.*
11. *Laakshmi Saravanakumar, kaanagan. Ezhthu Prasuram, Anna Nagar, Chennai* — *600040.*

13) *Wikipedia (Tamil). "Paliyar Tribe." [online]. Available: [https://ta.wikipedia.org/s/tod](https://ta.wikipedia.org/s/tod).*

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com